முருகப்பெருமான் துணை

# மகான் அதிபத்த நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.09.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. மாதவராஜனே அரங்கா வாழ்க
மக்களை காத்தருள வந்த
மாதவஞானியே வாழ்க வாழ்க
மகான் அரங்கன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது யாளி திங்கள்
குறைவிலா முப்பானோர் திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 31 ம் நாள், 17.09.2023, ஞாயிற்றுக்கிழமை)
அறிவுரை ஆசிதனை ஆழ்வார்களை தொடர்ந்து
அறுபத்து மூன்று நாயன்மார்களும் உரைப்போம்
3. உரைக்கவே அதிபத்த நாயன்மாரும்
உலகநலம் காணவே உரைப்பேன்
மறைபோற்றும் கழனிகிருஷியென
மக்கள் ஏற்றுள்ள எல்லாத் துறைகளும்
4. துறைகளும் சிறந்து விளங்கி
தெய்வபலம் கொண்ட வண்ணம்
அறமும் நீதியும் குறையாதபடி
அனைத்துமே தேறி அகிலம் மாறும்
5. மாறுதலை செய்ய வேண்டி
மகானாக இந்தப்புவியில்
ஆறுமுகனார் அவதாரமாகவந்த
அரங்க ஞானி வழிகாட்டலால்
6. வழிகாட்டலால் வையகம் எங்கும்
வள்ளல் தன்மை பெருகும்
அழிவைதரும் சகல இன்னலும்
அகன்றுமேவி பாதுகாப்பான

7. ஆனதொரு ஞான வாழ்வாக
அமைதி சகோதரத்துவம் கூடிய
ஞான வாழ்வும் நம்பகத்துடன்
நாடெங்கிலும் மாற்றம் கூடி
8. கூடியே நல்லத் தலைமையும்
குருமார்கள் துணைபடவே
நாடெங்கிலும் அறச்சேவை
ஞானிகளை உருவாக்கி இனிதே
9. இனிதே ஞானிகள் வெளிப்பட
எல்லாம் சமம் என்கிற
கனிவேலவன் காட்சிபடவே
கலியுகம் ஞானயுகமாக மாற்றம்
10. மாற்றம் கண்டு அற்புதம்
மகான் அரங்கன் பலத்தால்
ஆற்றல் பட கண்டடையும்
ஆனந்தமும் பேரானந்தமும் கூடிய
11. கூடிய வாழ்வாக மக்கள்
குறைவிலா கண்டுத் தேறி
ஈடேற்றம் இனிபிறவாநிலையாகும்
இயம்பிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–